கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (யூலை/ஆகஸ்ட் 2015)

# GYS 2243 புவியியல் சிந்தனைகளும் மாதிரி நுட்பங்களும்

ம் : 03 மணித்தியாலங்கள்

தாயினும் நான்கு(04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
லக புறவரிப்படம் வழங்கப்படும்.

---

(அ) வழங்கப்பட்டுள்ள உலகப்படத்தில் கிரேக்க மற்றும் பீனிசீய குடியிருப்புக்கள் காணப்பட்ட இடங்களை குறித்துப் பெயரிடுக.

(06 புள்ளிகள்)

(ஆ)கிரேக்க மற்றும் பீனிய மக்கள் வாழ்ந்த பிரதேசம் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லத்தக்கதாக அமைந்திருந்தது எனக் கருதுவதற்கு ஏதுவாக இருந்த காரணிகளை சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) புவியியற் சிந்தனை வரலாற்றில் கிரேக்கர்கள் ஆற்றிய பங்களிப்பு எவ்வகையில் பின் வந்த சிந்தனையாளர்களுக்கு முன் மாதிரியாக அமைந்தது என்பதனை விளக்குக.

(12 புள்ளிகள்)

(அ) வகைப்படுத்தல் என்ற பதத்தினை வரையறை செய்வதுடன் புவியியல் வகைப்பாடுகளுக்கான உதாரணங்கள் மூன்றினை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) புவியியல் கற்கையில் வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதற்கான நோக்கங்களை உதாரணங்கள் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

இ) "தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பிரதேசமயமாக்கம் என்பது நன்மை தரும் விளைவுகள் பலவற்றைக்கொண்டிருக்கின்றது." இக்கூற்றினை பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

03.(அ) அராபியர்கால புவியியல் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய இரண்டு காரணிகளை குறிப்பிட்டு அக்காரணிகள் எவ்வகையில் புவியியல் தொடர்பான விழிப்புணர்வினை உலக ரீதியாக ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) புவியியற் சிந்தனை வரலாற்றில் அராபியர்காலம் ஏன் ஒரு பொற்காலமாகக் கருதப்படுகின்றது என்பதற்கான ஆதாரங்களை விளக்குக.

(15 புள்ளிகள்)

04.(அ)"உண்மைத்தன்மை ஒன்றின் இயல்புகளை எளிமையானதொருவடிவில் எடுத்துக்காட்டி நிற்பவையே மாதிரிகளாகும்." இக்கூற்றினை புவியியற் பின் புலத்தில் விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ)புவியியலில் மாதிரிகள் எவ்வடிவங்களில் எடுத்துக்காட்டப்படுகின்றன என்பதனை அவற்றுடன் சம்பந்தப்படுகின்ற ஒவ்வொரு உதாரணங்கள் மூலம் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(இ)"புவியியல் எண்ணக்கருக்களை இலகுவில் விளங்கிக்கொள்வதற்கு மாதிரிகள் தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றபோதிலும் அவை மறுக்கப்படுவதற்கான காரணங்களும் அவ்வப்பொழுது சுட்டிக்காட்டப்படுகின்றன." இக்கூற்றினை நுணுகி பரிசீலிக்குக.

(14 புள்ளிகள்)

05.(அ) ஒரு முழுமையான உலகினை கண்டறியும் நோக்குடன் கடற் பிரயாணங்களை மேற்கொண்ட கடலோடிகள்/அறிஞர்கள் ஐவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) அவர்களுள் எவராயினும் ஒருவரது கடற் பிரயாணங்களின் மூலமான புவியியல் வளர்ச்சிக்கான பங்களிப்பினை கடற் பிரயாணங்களை மேற்கொண்ட பாதைகளை உலகப்படத்தில் வரைந்து காட்டி விளக்குக.

(20 புள்ளிகள்)

06. "1960 களில் அளவை சார் புரட்சியின் அறிமுகம் முதற்கொண்டு இன்று வரையில் புவியியல் அதன் தனித்துவத்தினை நவீனத்துவத்தின் செயற்பாடுகளின் விளைவாக படிப்படியாக இழந்து வருகின்றது." எனும் கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? நுணுகிப் பரிசீலிக்குக.

(25 புள்ளிகள்)

*****